பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

18.08.2025 7 15

திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிஜேபி மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- நாடு முழுவதும் 13 லட்சத்துக்கும் அதிகமான வணிகர்களுக்கு உணவுப் பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.
- நீதிமன்றங்கள் ஏழைகள் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனுக்காக பணியாற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய் வலியுறுத்தியுள்ளார்.
- சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Wang Yi இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.
- சுவிட்சர்லாந்தில் நடைபெற உள்ள டைமன் லீக் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்க இந்தியாவின் Neeraj Chopra தகுதி பெற்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு.

சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த 59 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிஜேபி மகளிரணி தலைவர் திருமதி வானிதி சீனிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் நீண்டகாலத்திற்குப் பிறகு தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசு துணைத்தலைவராகும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பது உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு பெருமிதம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், அவரது அர்ப்பணிப்பு, பணிவு மற்றும் அறிவுத்திறனால் பொதுவாழ்வில் தம்மை வேறுபடுத்திக் காட்டியவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், குடியரசு துணைத்தலைவராக பொறுப்பேற்று அவரது மேன்மையான பணிகளை தொடர வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் நாடு முழுவதும் 13 லட்சத்துக்கும் அதிகமான வணிகர்களுக்கு உணவுப் பாதுகாப்பு பயிற்சி அளித்துள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் முற்றிலும் பெண்களால் நடத்தப்படும் சாலையோர உணவக வளாகத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், மகளிர் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்படும் இந்த உணவக வளாகம், பாதுகாப்பான உணவு கிடைக்க வகை செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் இந்த வளாகம், மகளிருக்கு அதிகாரம் அளிக்கவும், சமுதாய வளர்ச்சிக்கும் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் இதுவரை 405 உணவக வளாகங்களுக்கு தர நிர்ணய சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

நீதிமன்றங்கள் ஏழைகள் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனுக்காக பணியாற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கவாய் கேட்டுக்கொண்டுள்ளார்.

மஹாராஷ்டிர மாநிலம் Kolhapur-ல் மும்பை உயர்நீதிமன்ற தற்காலிக கிளையை திறந்து வைத்துப் பேசிய அவர், இந்த தற்காலிக கிளையை நிரந்தர கிளையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதன்மூலம் மகாராஷ்டிராவின் மேற்குப் பகுதியில் உள்ள மக்கள் வழக்குகளுக்காக நீண்ட தொலைவுக்கு செல்வது தவிர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதி பரிபாலனத்தில் மராத்திய மன்னர் சாஹு மஹராஜின் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தலைமை நீதிபதி திரு. கவாய் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Wang Yi இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் விடுத்தத அழைப்பின் பேரில் இந்தியா வரும் அவர், புதுதில்லியில் நடைபெற உள்ள இந்தியா - சீனா எல்லைப் பிரச்சினை குறித்த 24வது சுற்று சிறப்பு பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறார்.

தமது இந்தப் பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருடனும் திரு. Wang Yi பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

<<<<>>>>

நீரிழிவு மற்றும் உடல் பருமன் பிரச்சினைகளுக்கு நவீன மருத்துவத்தையும், பாரம்பரிய முறைகளையும் ஒருங்கிணைத்து முழுமையான தீர்வுகாண வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசிய அவர், இந்தியாவில் உடல் பருமன் மற்றும் அதனுடன் தொடர்புடைய வளர்ச்சிதை மாற்றக் கோளாறுகள் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு முறை, உணவின் தரம், உட்கொள்ள வேண்டிய அளவு குறித்து அறிவியல்பூர்வமான அணுகுமுறை தேவை என்று குறிப்பிட்ட திரு. ஜிதேந்திர சிங், யோகா பயிற்சியின் மூலம் நீரிழிவு நோயை 40 சதவீதம் வரை குறைக்க முடியும் என்று ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் கூறினார்.

<<<<>>>>

பீஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தின்போது நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையம் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து பீஹார் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிடடுள்ள செய்திக்குறிப்பில், புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களின் பெயரும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் கடந்த ஒன்றாம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

<<<<>>>>

நாட்டில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியை ஊக்குவிக்க மத்திய அரசு கேலோ இந்தியா திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தின் சேலத்தில் நடைபெற்ற மாநில அளவிலான யோகாசனப் போட்டியில் மாணவியர் அதிகளவில் பங்கேற்று யோகாசனம் செய்தனர்.

இந்தப் போட்டி மாணவியருக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கித் தருவதாக அதன் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

குலசேகரப் பட்டினம் ராக்கெட் ஏவுதளம் மூலம் தென் தமிழகம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று இஸ்ரோ முன்னாள் இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக கூறினார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் – யுக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பல்வேறு ஐரோப்பிய தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

வெள்ளை மாளிகையில் இன்று நடைபெறும் இந்த சந்திப்பில், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான், ஜெர்மனி Chancellor திரு Friedrich Merz, ஐரோப்பிய ஆணையத் தலைவர் திருமதி Ursula Von Der Leyen, பின்லாந்து அதிபர் திரு Alexander Stubb ஆகியோர் பங்கேற்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

யுக்ரைனில் அமைதி உருவாகவும், ஐரோப்பாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் இந்த தலைவர்களின் பங்கேற்பு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேட்டோ தலைமை செயலர் மார்க் ட்ருடே, இத்தாலி பிரதமர் Giorgia Meloni ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

சுவிட்சர்லாந்தில் நடைபெற உள்ள டைமன் லீக் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்க இந்தியாவின் Neeraj Chopra தகுதி பெற்றுள்ளார்.

தரவரிசைப் பட்டியலில் பெற்ற கூடுதல் புள்ளிகள் அடிப்படையில் அவர் நேரடியாக இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ரித்விக் இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 4 தங்கம், 5 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

Divyanshi Bhouwmick 17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவிலும், கலப்பு இரட்டையர் பிரிவிலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றார்.

15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் Ananya-வும், 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் Harkunwar-ம் தங்கப்ப தக்கம் வென்றனர்.

Ankolika, Vaishnavi, Kushal மற்றும் Abinandh - Ananya இணையும் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

Sidhant, Ananya, Abinanth, Vaishnavi, Shriya ஆகியோர் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

<<<<>>>>

கானா சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

ACCRA-வில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Aalisha Naik-ம், ஆடவர் இரட்டையர் பிரிவில் Abinash - Ayush இணையும் இப்பதக்கங்களைக் கைப்பற்றினர்.

<<<<>>>>

பெரு பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Deep Ranjan Bisoyee - Manoj Sarkar இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 22-20, 21-11 என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் Daniel - பிரான்சின் Thomas இணையை வென்றது.

<<<<>>>>